திரண்டு கண்மணியே நாவலனே மண்ணாதியாமுடம்பு மாய்ந்தாலும் எண்ணர் உன் கீர்த்தி உடம்பு கெடுமோ கிடைக்கும் உண்மை அரிச்சந்திரனே" என்று இரங்குகின்றார்.

திருநெல்வேலி க. வேலுப்பிள்ளை என்பவர் "திருவாளன் திருவைந்தெழுத்திடையாரு ஈதாவிக்கும் எழிற்திருவாக்கும் சற்குரு பாதங் கருதும் உளமும் விபூதி ஒளி தயங்கு மேனியும் .... திராவிட நின்மல மறை கொள்திருக்கரமும்" என்று குறிக்கின்றார். இக்கருத்துப் பிறர் இரங்கல்களிலும் உள்ளது. அவர் வரலாற்றின் இக்கருத்துக்கள் இவர்கள் வாக்குகள் தெளிவாக நிரந்தரமானதாக தெளிவுறுத்தப்படவில்லை என்பதை அவதானிக்கமுடிகின்றது.

நாவலர் மருகரும் வித்துவ சிரோமணியுமான ச. பொன்னம்பலபிள்ளையின் இரங்கலில் பிறரின் கருத்துக்கள் பல தெளிவாக்கப்பட்டிருப்பதோடு ஒரு அரிய புதிய கருத்தும் இடம்பெற்றுள்ளது. "உட்டெளிவுடைய பட்டணத்தடிகள் போல் அன்னையை அடிபணிந்து ஆதரித்திட்டோய்" என்னும் பகுதி உள்ளது. இக்கருத்தை வெளிப்படுத்தப் பூரணமான தகுதியும் உரிமையும் உடைய நாவலர் மருகரால் கூறப்பட்டிருக்கிறது, மிக்க மதிப்புடையதாயுள்ளது. எல்லா வகையிலும் நாவலர் குடும்பத் தொடர்புடைய விரும்பிய அதிகாரம் உடையவருமாகிய ஸ்ரீமத் கைலாசபிள்ளையால் எழுதப்பட்ட வரலாற்றில் இக்கருத்து பல நிகழ்வாதாரங்களுடன் தெளிவாக்கப்பட வேண்டிய கருத்து சுட்டப்படாமலே மறைந்திருக்கின்றது. தோள் கண்டார் தோளே கண்டார் என்பது போல் அவர் பார்வை அவர் மதித்த விடயங்களே தெரிந்திருக்கின்றது. நாவலரின் பூரண இயல்பு தெரிந்திருக்கமுடியவில்லை என்றே சமாதானப்படவேண்டியிருக்கின்றது.

கோபாலகிருஷ்ண பாரதியார் - சிவசம்புப் புலவர் ஆகியோரை நாவலர் கௌரவித்த விடயங்கள் போல் இன்னும் பலரை நாவலர் கௌரவித்திருப்பார் என்பதும் தன் கடமை வேலைகளுக்கிடையே வேண்டிய நேரத்தை ஒதுக்கி பஞ்சாட்சர செபம் - திருமுறைப் பாராயணத்தில் மிகக் கணிசமாக ஈடுபட்டிருப்பார் என்ற உண்மையும் பல இரங்கற் பாக்களில் இடம்பெற்றிருக்கின்றன.

சமுதாய ஒழுங்கு ஆகமவிதி என்ற அடிப்படைகளில் மிகக் கருரான ஒருவராக இருந்த போதும் இரக்கம் - மன்னிப்பு - கொடை - சிவபக்தி முதலிய விடயங்களில் நாவலர் பெருமான தலைசிறந்த உதாரண புருசராக இருந்திருப்பதை இவர் பற்றி இரங்கற் பாக்கள் தெளிவாக்குவதை அறிந்து ஆறுமுகநாவலரிடம் ஆராமைகொள்வது அவசியமும் நன்மையும் ஆனது என அறிவோம்.

## வாசகர்கள் பேசுகிறார்கள்

வணக்கம். ஓம் நமசிவாய.

மின்னஞ்சலில் இந்துசாதனம் கிடைக்கப்பெற்றது. மிக்க மகிழ்ச்சி. நான் யாழ் இந்துவில் படிக்கும் காலத்தில் இந்துசாதனம் அச்சேறுவதை தவறாமல் பார்த்திருக்கிறேன். இப்போது பார்க்கும்போது ஏதோ பழைய நண்பனை மீளப் பெற்ற உணர்வு ஏற்படுகிறது. அதனிலும் மேலாக எனது கல்லூரித் தோழனுக்கு அகவை அறுபது என அறியவும் முடிந்தது. அவர்தான் எமது கம்பவாரிதி இ.ஜெயராஜ்.

பிரசுரிக்கப்பட்ட அத்தனை கட்டுரைகளும் அற்புதம். அதிலும் புலம்பெயர் வாழ்வில் இருக்கும் என்போன்றவர்களின் ஏக்கப்பெருமூச்சைப் பிரதிபலிப்பதாக நீர்வை தி.மயூரகிரியின் தமிழரும் இந்துமதமும் என்ற கட்டுரை அமைந்திருந்தது. நற்பணிதொடர வாழ்த்துக்கள்.

*கோபிரமணா. நடனசபாபதிசர்மா*
*பிரான்ஸ்.*

நன்றி. பழமை வாய்ந்த இந்து சாதனம் அருமையான கருத்துக் களமாக வெளிவருவது கண்டு மகிழ்ச்சி. நிலம் உழப்படுகின்றது. விதைகள் தூவப்பட வேண்டிய தருணம். நம்மவர்கள் பங்களிக்க வேண்டும்.

*அன்புடன்*
*மருத்துவர் இ. லம்போதரன்,*
*கனடா.*

வாசிப்பதில் ஆர்வமில்லாதவர்களாக இன்று இளைஞர். யுவதிகள் இருக்கிறார்கள். எனவே அவர்களை உள்வாங்கும் வகையில் ஈர்க்குமாறு எளிமையாக இலகு நடையில் படங்களோடு கட்டுரைகளை எழுதுங்கள்.

பழைய காலம் போல தத்துவம் – சித்தாந்தம் என்று நின்று விடாமல் நடைமுறையோடு தொடர்புபட்ட விடயங்களை பகிருங்கள். சென்ற கார்த்திகை இதழில் ஐயப்பன் வழிபாடு பற்றி வந்த கேள்வி – பதில் என்னை மிகவும் கவர்ந்தது. இதுதான் இன்றைய தேவையாகும். முன்பக்க கட்டுரையும் மிகவும் நல்லது. ஆசிரியர் தலையங்கம் சிந்திக்க வைத்தது. ஆனால் நம் சைவம் இப்படித்தான் என்று குறுக்கி விடமுடியாது.

அதிபத்த நாயனார், கண்ணப்ப நாயனார் எல்லாம் என்ன செய்தார்கள்? ஆகமங்களில் பலியிடுமாறு சொல்லப்படவில்லையா? ஆகவே இவற்றுக்கு சட்டம் போடுவது சரியா என்று தெரியவில்லை என்பதே எனது எண்ணம். எப்பாடுபட்டாவது இளைஞர்களுக்குரிய இதழாக நடத்துங்கள். வாழ்த்துக்கள்.

*திருமதி மலர் கோணேசபிள்ளை*
*லோவர் றோட், உவர்மலை,*
*திருமலை*